# சேர் செய்யத் அஹ்மத் கான், கலாநிதி டி.பி. ஜாயாவின் கல்வி, சமூகப் பணிகள் குறித்த ஒப்பீட்டாய்வு

எஸ்.எம். தமீம்
பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை

**ஆய்வுச் சுருக்கம்**
19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் இஸ்லாமிய உலகின் எழுச்சிக்கு இந்தியாவில் சேர். செய்யத் அஹ்மத் கான் மற்றும் இலங்கையில் டி.பி. ஜாயா ஆகியோர் ஆற்றிய பங்களிப்பை ஒப்பீட்டாய்வதே இவ்வாய்வின் இலக்காகும். முன்னையவர் மேற்குச் சூழலில் இஸ்லாமிய விழுமியங்களுக்கு முரணற்ற நவீன கல்வியையும் ஆங்கிலத்தையும் கற்பிக்க முயற்சித்த அதேவேளை பின்னையவர் சமயச் சூழலில் முஸ்லிம்கள் நவீன கல்வியைப் பெற்று சமூக முன்னேற்றம் காண வேண்டும் என்ற சிந்தனையைக் கொண்டிருந்தார். அத்தோடு சேர். செய்யத் அஹ்மத் கான் காலனித்துவ ஆட்சியாளர்களோடு நெருக்கமான உறவைப் பேணி தனது பணிகளை முன்னெடுக்க, கலாநிதி ஜாயா சுதேச தலைவர்களோடு நெருக்கமான உறவினைக் கொண்டிருந்தார். இவ்வாறு தத்தம் கால சமூகம் எதிர்கொண்ட சவால்களை இவ்விரு தலைவர்களும் தமக்கே உரிய முறையில் அணுகியுள்ளமை இங்கு கவனிக்கத் தக்கதாகும். சேர் செய்யத் அஹ்மத்கானின் கருத்துக்கள் இந்தியாவில் மாத்திரமன்றி தென்கிழக்காசியாவின் பல்வேறு நாடுகளிலும் செல்வாக்குச் செலுத்திவரும் அதேவேளை டி.பி.ஜாயாவின் கருத்துகள் உள்நாட்டில் தாக்கம் செலுத்தின.

**பிரதான சொற்கள்**: சமயச் சூழல், சமூகப் பணிகள், சீர்தருத்தம், நவீன கல்வி

## அறிமுகம்

கி.பி 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகள் என்பன இஸ்லாமிய உலகைப் பொறுத்தவரையில் சமூக, பொருளாதார, அரசியல், கல்வித் துறைகளில் மிகவும் வீழ்ச்சியடைந்த காலப் பகுதியாகும். இஸ்லாமிய உலகின் ஸ்திரத்தன்மைக்கு உந்துதல் தந்த துருக்கிய இஸ்லாமிய ஆட்சியும், இந்தியாவில் மொகலாய ஆட்சியும் வீழ்ச்சியடைந்து, மேற்கின் காலனித்துவ வாதம் முஸ்லிம் உலகை ஆக்கிரமித்திருந்த காலப்பகுதியாகும். முஸ்லிம்கள் ஆய்வுத் துறை, சுதந்திர சிந்தனை, அறிவு வேட்கை என்பவற்றைக் கைவிட்டு, தமது முன்னோர்களை ஆராய்வின்றிப் பின்பற்றும் நடைமுறை முஸ்லிம் சமூகத்தில் தோன்றியது. இதனால் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் தோன்றுகின்ற பிரச்சினைகளுக்கு அவர்கள் தீர்வினைப் பெற்றுக் கொள்ளத் தடுமாறினர். அத்தோடு அவர்கள் மத்தியில் மூடக் கொள்கைகளும் அநாச்சாரங்களும் தோன்றின. இஸ்லாமிய உலகை இந்நிலையிலிருந்து மீட்டெடுக்க காலத்துக்குக் காலம் பல்வேறு சீர்திருத்தவாதிகள் தோன்றினர். ஒவ்வோர் காலத்தில் தோன்றியோரும் தத்தம் கால சமூக, கலாசார, அரசியல் நிலைக்கு ஏற்ப தமது பணிகளை வடிவமைத்துக் கொண்டனர். இந்த வகையில் காலனித்துவ காலத்தில் குறிப்பாக 1857இல் இந்தியாவில் இடம்பெற்ற சிப்பாய்க் கலகத்தின் பின்னர் இந்திய முஸ்லிம்கள் மத்தியில் பிரபல்யம்பெற்று, இந்திய முஸ்லிம்களது இருப்பு, பாதுகாப்பு, கல்வி, சமூக, அரசியல் மேம்பாட்டிற்கு உழைத்த சேர். செய்யத் அஹ்மத் கானினதும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் கல்வி, அரசியல் விழிப்புக்குப் பங்காற்றிய கலாநிதி டி.பி. ஜாயாவினதும் பணிகளை ஒப்பீட்டு ரீதியில் நோக்குவது பொருத்தமானதாகும். இதனூடாக இவர்களது பணிகளிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டு கொள்ள முடியும்.

## ஆய்வுப் பிரச்சினை

கலாநிதி ஜாயா இலங்கையின் சேர் செய்யத் அஹ்மத் கான் என அழைக்கப்படுகின்றார். இவரது கால இலங்கை முஸ்லிம்களது கல்வி எழுச்சிக்கு அவர் ஆற்றிய பணிகளே இவ்வாறு அவர் அழைக்கப்படக் காரணமாகும். உண்மையில் இத்தகைய கருத்து தோற்றம் பெற வழியமைத்த காரணிகள், இக்கூற்றின் உண்மை நிலை போன்ற அம்சங்களுக்கு விடைகாண வேண்டும். இப்பின்னணியிலே இவ்விரு தலைவர்களதும் கல்வி, சமூக, அரசியற் பணிகள் பற்றி ஆய்வு செய்யப்படல் வேண்டும். இத்தகைய ஒப்பீட்டாய்வு இவர்களது பணிகளின் தன்மைகளைத் துல்லியமாக மதிப்பிடத் துணை செய்யும்.

### நோக்கங்கள்

இந்த ஆய்வு பின்வரும் இரு நோக்கங்களை மையமாகக் கொண்டுள்ளது.

1. கலாநிதி டி.பி. ஜாயா, சேர் செய்யத் அஹ்மத் கான் ஆகியோரது கல்வி, சமூக, அரசியல் பங்களிப்புக்களை அறிந்து கொள்ளல்.

2. இவ்விரு அறிஞர்களது பணிகளை ஒப்பீடு செய்து அவர்களது பணிகளிலுள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை அடையாளம் காணல்

### ஆய்வு முறைமை

இந்த ஆய்வு பண்பு சார்ந்த ஆய்வாகவும் இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியும் அமைந்துள்ளது. நூலக ஆய்வு முறையின் (Library Research) அடிப்படையில் இவ்வாய்வுக்கான தரவுகளும், தகவல்களும் முன்னைய ஆய்வுகள், நூல்கள், சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள், ஆராய்ச்சி மாநாட்டு ஏடுகள் முதலிய இரண்டாம் தர மூலங்களிலிருந்து திரட்டப்பட்டுள்ளன. விவரண முறை (Descriptive Analysis) மூலம் திரட்டப் பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

### சேர் செய்யத் அஹ்மத் கான்

சேர். செய்யத் அஹ்மத் கான் (1817-1898) 19ஆம் நூற்றாண்டு இஸ்லாமிய உலகு கண்டு கொண்ட மாபெரும் சிந்தனையாளரும் சீர்திருத்தவாதியும் ஆவார். இந்திய முஸ்லிம்களுக்குப் புதிய அரசியல் சீர்திருத்தத்தையும் சமூக கலாசார நோக்கையும் அறிமுகம் செய்த இவர் நவீன மேற்குக் கல்வியின் துணைகொண்டு முஸ்லிம்கள் முன்னேற்றமடைய வேண்டும் என்ற சிந்தனையை முன்வைத்தார். இவரே கிழக்காசியாவில் முஸ்லிம்களது முதல்கல்வி நிறுவன அமைப்பொன்றைத் தோற்றுவித்த இந்திய முஸ்லிம் ஆவார். முஸ்லிம்கள் நவீன கல்வியை சன்மார்க்க நெறிகளைப் பேணி கற்க வேண்டுமென வலியுறுத்தி வந்தார். இவர் பற்றி அல்லாமா இக்பால் குறிப்பிடும் போது "உடம்பில் ஏற்படும் எந்தவோர் வேதனைக்கும் கண்கள் அழுவதைப் போல சமூகம் அனுபவித்த துன்பங்களைக் கண்டு இவர் வேதனையுற்றார். இச்சமயத்தில் ஆங்கில கல்வியையும் பிரித்தானியரையும் எதிர்த்த முஸ்லிம்களில் ஒரு பிரிவினரின் எதிர்ப்பையும் தாண்டி முஸ்லிம்களுக்கு நவீன கல்வியை வழங்கவும் அவர்களைச் சீரமைக்கவும் முடிந்ததுடன் அப்பணிகளில் குறிப்பிடத்தக்க வெற்றியையும் காணவும் இவரால் முடிந்தது".[2]
இவர் 17 ஒக்டோபர் 1817ம் ஆண்டு டெல்லியில் பிறந்தார். இவரது முன்னோர்கள் அக்பர் ஷாவின் ஆட்சியில் இந்தியாவிற்கு வந்துள்ளனர். இக்குடும்பத்தினர் மொகலாய மன்னர் அக்பரின் காலம் தொட்டு அரச நிருவாகத்தில் பங்கு கொண்டிருந்தனர். அவர்களுள் சேர் செய்யித் அஹ்மத் கானின் பாட்டனாரான காஜா பரீதுத்தீன் குறிப்பிடத்தக்கவராவார்.[3]

செய்யித் அஹ்மத் கான் மரபு ரீதியான ஆரம்பக் கல்வியை மௌலவி ஹமீதுத்தீன் என்பவரிடம் கற்றுத் தேர்ந்தார். அறபு, பாரசீகம் ஆகிய மொழிகளுடன் கணிதம், விஞ்ஞானம், மருத்துவம் போன்ற துறைகளையும் கற்றார். தனது 19 ஆம் வயதில் முறைசார் கல்வியை முடித்துக் கொண்டு 1938இல் கிழக்கிந்திய கம்பெனியில் இலிகிதராகச் சேர்ந்தார். மூன்று வருடங்களின் பின்னர் அரச குற்றவியல் திணைக்களத்தில் துணை நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டு நாட்டின் பல பாகங்களிலும் பணியாற்றினார்.

கி.பி. 1857இல் இந்தியர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகப் புரட்சி மேற்கொண்டு, கண்ட இடங்களில் எல்லாம் ஆங்கிலேயரைக் கொன்று குவித்தனர். எனினும் சேர் செய்யத் அஹ்மத் கான் இந்தப் புரட்சி இந்தியருக்கு எந்தவொரு நல்ல விளைவையும் கொண்டுவர மாட்டாது என்பதையும் இறுதியில் வெற்றி ஆங்கிலேயருக்கே அமையும் எனவும் கருதினார். இதனால் ஆங்கிலேயர் பலரின் உயிர்களைப் பாதுகாத்த இவர் அவர்களை பாதுகாப்பாக மீருத் எனும் இடத்திற்கு அனுப்பி வைத்தார். இது ஆங்கிலேயருக்கு அவர் மீது விசுவாசத்தை அதிகரிக்கச் செய்ததோடு அவரை இந்தியாவின் நட்சத்திரம் என சிறப்பாக அழைக்கவும் வழிவகுத்தது.[4] இந்தப் பின்னணியில் இருந்துதான் சேர் செய்யத் அஹ்மத் கான் இந்திய முஸ்லிம் சமூகத்தினது சமூக எழுச்சிக்கு பங்களிப்புச் செய்கின்றார்.

கி.பி 1857இல் இடம்பெற்ற இந்திய சுததந்திரப் போராட்டத்தின் சூத்திரதாரிகள் முஸ்லிம்களே எனக் கருதிய பிரித்தானியர் முஸ்லிம்கள் மீது ஓயாமல் கொடுமைகளை இழைத்துக் கொண்டிருந்தனர். புரட்சியின் பின் இந்திய முஸ்லிம் சமூகத்திற்குத் தலைமை தாங்கும் சக்தி கொண்டவர்கள் எனக் கருதத்தக்க பொரும்பான்மையான முஸ்லிம்களைக் கொலை செய்தனர். முஸ்லிம்களுக்கும் பிரித்தானியருக்கும் இடையில் நிலவிய இத்தகைய மோதல் நிலையைத் தவிர்ப்பதும் முஸ்லிம்கள் வீழ்ச்சியை நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டிருப்பதை தடுப்பதும் அன்றிருந்த மிகப்பெரும் இரு சவால்களாகும். இந்நிலையிலிருந்து முஸ்லிம்கள் விடுபட

வேண்டும் என்பதற்காக நடந்து முடிந்த புரட்சியின் பின்னணியை விளக்கி, அது நடந்தமைக்கான காரணியைக் குறிப்பிட்டு, அதற்கு முஸ்லிம்கள் காரணம் அல்ல என்பதை விளக்கும் வகையில் “அஸ்பாப் ஏ பஹுவதே ஹிந்து” எனும் நூலை சேர் செய்யத் எழுதினார். இதில் முஸ்லிம்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களில் எந்தவொரு நியாயமும் இல்லை எனவும் முஸ்லிம்களே அநீதிக்குள்ளாகியுள்ளனர் என்பதையும் அரசே கிறிஸ்தவ மயமாக்கல் மூலம் குடிமக்களின் மார்க்க அனுஷ்டானங்களிலும் நம்பிக்கைக் கோட்பாடுகளிலும் தலையிட்டுள்ளது என்பதையும் ஆதாரபூர்வமாக நிரூபித்தார். இதனால் முஸ்லிம்களுக்கு எதிரான ஆங்கிலேய அரசின் நிலைப்பாட்டில் சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டன.

இந்திய முஸ்லிம்களின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்ட செய்யத் அஹ்மத் கான் அது பிரித்தானியருடனான நெருங்கிய உறவில்தான் தங்கியுள்ளது என்பதை முஸ்லிம்களுக்கு உணர்த்தி, முஸ்லிம்கள் பிரித்தானிய அரசுக்கு விசுவாசமிக்கவர்கள் என்பதை ஆங்கிலேயருக்கு உணர்த்தும் மகத்தான பொறுப்பை ஆற்ற வேண்டுமென உணர்ந்தார். இதற்கான ஏக வழி முஸ்லிம்கள் மேற்கத்தேயக் கல்வியைப் பெற்றுக் கொள்வதாகும். இதனால் ஆங்கிலேயருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையேயுள்ள பகைமை நீங்கும் என்று அவர் உறுதியாக எதிர்பார்த்தார். இது சேர் செய்யத் அன்றைய இந்திய முஸ்லிம்களின் அபாயகரமான அரசியல், கல்வி நிலைப்பாட்டை நுணுக்கமாக உணர்ந்தமையைத் தெளிவுபடுத்துகின்றது.

இந்திய முஸ்லிம்களது அரசியல், சமூக, பொருளாதார முன்னேற்றமானது கல்வி மறுமலர்ச்சியிலேதான் தங்கியுள்ளது என்பதை உணர்ந்த செய்யத் அஹ்மத் கான் முஸ்லிம்களது அறியாமையை போக்கும் கல்வித் துறையை சீர் செய்யும் மகத்தான பொறுப்பை உணர்ந்தார். நவீன கல்வி முறையைக் கற்பது இறைநிராகரிப்புக்கு இட்டுச் செல்லும் என்ற சமயவாதிகளது பிரசாரங்களுக்கு மத்தியிலே அவர் இதனை முன்னெடுக்க வேண்டியிருந்தது. இந்துக்களும் மராட்டியர்களும் நவீன கல்வி முறையின் பயனை அனுபவிப்பதையும் இதனால் முஸ்லிம்களை விட அவர்களே அரச உயர் பதவிகளை வகித்து சமூக அந்தஷ்தை உயர்த்திக் கொள்வதையும் கண்டார். அத்தோடு நவீன கல்வியறிவின்மையினால் முஸ்லிம் சமூகம் அடையும் தேக்கநிலை பற்றியும் முஸ்லிம்களை எச்சரித்தார்.

சேர் செய்யத் அவர்களது பிரதான அடைவு அவரது அலிகார் இயக்கமாகும். இவ்வியக்கம் முஸ்லிம்களது நவீன கல்வி பற்றிக் கவனம் செலுத்தியது. இவர் 1859இல் முராதாபாதிலும் 1863இல் காசிப்பூரிலும் கல்லூரிகளை நிறுவினார். கி.பி. 1862இல் இலக்கிய விஞ்ஞான சங்கமொன்றை அலிகாரில் நிறுவினார். இந்த சங்கத்தின் பிரதான நோக்கம், விஞ்ஞானம், பொருளியல், வரலாறு போன்ற துறைகளில் நவீன கருத்துக்களை வெளியிடுவதும் இது தொடர்பான மிக முக்கிய ஆங்கில நூல்களை உருது மொழியில் மொழிபெயர்த்து நாட்டு மக்களிடம் பரப்புவதுமாகும். அலிகார் இன்ஸ்டியுட் கஸட் (Aligarh Institute Gazette) என்ற சஞ்சிகையை விஞ்ஞான சங்கம் பற்றி கருத்துக்களை மக்கள் மயப்படுத்தும் நோக்கில் வெளியிட்டார். இந்நிலையில் இவரது கல்விச் சிந்தனைகளையும் பணிகளையும் முஸ்லிம் சமூகத்தின் சில சமயப் பெரியார்களும் பிற்போக்குவாதிகளும் எதிர்த்தனர். இதனால் முஸ்லிம் சமூகத்தின் சிந்தனைப் பாங்கில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்பதற்காக கி.பி 1870இல் தஹ்தீபுல் அஹ்லாக் எனும் சஞ்சிகையை வெளியிட்டார். இதில் நவீன கல்வியின் அவசியம், கல்வித் தாபனங்கள் பற்றிய செய்திகள், உலக முஸ்லிம்களது கல்வி முயற்சிகள் எனப் பல்வேறு ஆக்கங்கள் வெளிவந்தன. அத்துடன் ஹகீகதுஸ் ஸிஹ்ர் (1910), அப்தாலு குலாமி 1982, அஹ்காமு தஆமி அஹ்லில் கிதாப் 1868, ஆயின் அக்பரி 1855, அல்-குதபாத் அல்-அஹ்மதிய்யா, இஸாலதுல் கைன் அன் தில்கர்னைன் 1889, அத்துஆ வல் இஸ்திஜாபா 1982 போன்றன அவரது ஏனைய பிரபல்யமிக்க நூல்களாகும்.

சேர் செய்யத் அஹ்மத் கான் கி.பி. 1869இல் இங்கிலாந்துக்கு விஜயம் ஒற்றை மேற்கொண்டு அங்கிருந்த கல்விமுறைமை பற்றி அவதானம் செலுத்தினார். அங்கிருந்து திரும்பிய பின்னர் 1875 இல் Mohammadan Anglo Oriental College என்ற கல்லூரியை நிறுவினார். இக்கல்லூரியே 1920இல் அலிகார் பல்கலைக் கழகமாக மாற்றம் பெற்றது. இது இந்திய முஸ்லிம்கள் தங்களது அரசியல் முன்னேற்றத்துக்கு நவீன கல்வி முறைமையில் பரீட்சயம் பெற வேண்டும் என்பதற்காக சேர் செய்யத் அஹ்மத் கான் ஆற்றிய மாபெரும் பங்களிப்பாக உள்ளது. உண்மையில் இக்கல்லூரி மரபு ரீதியான கல்வி முறைமையும் நவீன கல்வி முறைமையையும் ஒன்றிணைக்கும் பிரதான நிறுவனமாகச் செயற்பட்டது. தான் நிறுவிய கலாசாலை மூலம் ஆங்கிலக் கல்வியின் அவசியத்தினையும் அது மேற்கத்தேய கலாசார சூழலின் அடிப்படையில் கற்பிக்கப்பட

வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். "இந்த (மேற்கு) கலாசாரத்தை முஸ்லிம்கள் முழுமையாக ஏற்றுக் கொள்வது அவசியமாகும். இதன் மூலம் இச்சமூகம் நாகரிகமடைந்த சமூகமாக மாற்றமடைய முடியும்".[5]என எழுதினார்.

உண்மையில் சேர் செய்யத அஹ்மத் கான் அன்றைய சூழலில் இந்திய முஸ்லிம்களது மறுமலர்ச்சிக்காக மேற்கொண்ட பணிகள் மகத்தானவை. எனினும் அவர் அதனை அடைய முற்பட்ட வழிமுறைகள் விமர்சனத்திற்கு உள்ளாகாமல் இல்லை. இதனால் தான் அவரது கல்விக் கொள்கைள் இரண்டு அடிப்படைக் குறைபாடுகளைக் கொண்டிருந்ததாக மௌலானா அபுல் ஹஸன் அலி அந்நத்வி சுட்டிக் காட்டுகின்றார்.

1. அவர் முன்னெடுத்த் கல்வி இயக்கம் இந்தியாவில் வாழ்ந்த முஸ்லிம்களது சமூக, சமய, பண்பாட்டு அம்சங்களை அடிப்படையாகக் கொள்ளாது மேற்கத்தேய சூழலையும் கல்வி முறைமைகளையும் கொண்டு கட்டமைக்கப்பட்டிருந்தது. அவரால் கல்லூரியில் கடைப்பிடிக்கப்பட்ட நிர்வாகச் சட்டங்கள் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். "இக்கல்லூரியினது வேந்தர் எப்பொழுதும் ஓர் ஆங்கிலேயராக இருப்பதுடன் குறைந்தது இக்கல்லூரியில் இரு ஆங்கிலப் பேராசிரியர்களும் இருக்க வேண்டும். உயர் தரத்திற்கான அதிபர் ஓர் ஆங்கிலேயராகவும் முதுநிலை விரிவுரையாளர்களில் ஐந்து அல்லது ஆறு பேர் ஆங்கிலேயராக இருப்பதுடன் இக்கல்வித் திட்டத்தினை வழி நடாத்துபவராகவும் இருக்க வேண்டும்".[6]

2. இவர் கைக்கொண்ட கல்விக் கொள்கை, மொழியியல், இலக்கியத் துறைகளது (Linguistics and Arts) விருத்திக்குப் பங்களிப்புச் செய்ததே அன்றி விஞ்ஞான, தொழிநுட்பத் துறைகளது விருத்திக்கு அதிகம் பங்களிப்புச் செய்யவில்லை. ஏனெனில் இவர் நவீன விஞ்ஞான, தொழிநுட்ப, கைத்தொழில் கற்கைகள், செயன்முறைகளை இந்தியச் சமூகம் கற்பதை ஆட்சேபித்தார். 1898ம் ஆண்டு பெப்ரவரி 9ம் திகதி அலிகார் இன்ஸ்டியுட் கெஸட் எனும் சஞ்சிகையில் அவர் எழுதியிருந்த கட்டுரையில் "தற்போதைய நிலையைக் கருத்திற் கொண்டால் முஸ்லிம்கள் கைத்தொழிற் துறைசார் கற்கைகளைக் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை"[7] எனக் குறிப்பிட்டார். எனவே இவரது கல்வித் திட்டத்தினால் உருவாகியவர்கள் அரசியல், இலக்கிய, நிர்வாக, நீதித் துறைகளில் பங்களிப்புச் செய்தனரே தவிர விஞ்ஞான, தொழிநுட்ப, பொருளியற் துறைகளில் பங்களிப்புச் செய்யவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும்.

இவ்வாறான விமர்சனங்கள் இருப்பினும் செய்யத் அஹ்மத் கான் இந்திய முஸ்லிம்களது கல்வி மறுமலர்ச்சியில் காத்திரமாகப் பங்களித்தவராகத் திகழ்கின்றார். இவரது பணிகள் இச்சமூகத்தில் நிலவிய கல்வி இடைவெளியை நிரப்புவதில் முக்கிய பங்களிப்புச் செய்ததோடு, ஆங்கிலேயரது எதிர்ப்புக்கும் கொடுமைக்கும் உள்ளாகியிருந்த முஸ்லிம்களை அந்நிலையிலிருந்து மீட்டு, அவர்களது இருப்பு, பாதுகாப்பு, சமூக அபிவிருத்திக்குப் பங்காற்றியதுடன், அவர்கள் மத்தியில் நவீன கல்வியை அறிமுகப்படுத்தி சமூக அந்தஸ்தைப் பெற்றுக் கொடுக்கவும் துணை செய்தது.

**கலாநிதி டி.பி. ஜாயா**

19ஆம் நூற்றாண்டில் இலங்கை முஸ்லிம்கள் கல்வி, அரசியல், தொழில் வாய்ப்பு போன்றவற்றில் பின்தங்கியிருந்த சமயத்தில் மறுமலர்ச்சி இயக்கத்தை வழிநடாத்திய M.C.சித்திலெப்பையின் பணிகள் முன்மாதிரியானவையாகும். அன்றைய சமய, பண்பாட்டு அம்சங்களில் முஸ்லிம் சமூகம் கொண்டிருந்த பற்று ஆங்கிலக் கல்வி, கிறிஸ்தவ சமயம் என்பவற்றை எதிர்ப்பதில் கவனம் செலுத்தியது. இக்காலப் பகுதியில் சமயச் சூழலில் நவீன கல்வி பற்றிய கருத்தாடல்களை அறிஞர் சித்திலெப்பை ஆரம்பித்து வைத்து 1892ல் ஸாஹிராக் கல்லூரியின் உருவாக்கத்திற்கு காரணமாக இருந்தார். அத்தோடு நாடளாவிய ரீதியில் பல்வேறு கல்லூரிகளின் உருவாக்கத்திற்கும் பங்களிப்புச் செய்தார். எனினும் இவரது பணிகளுக்கு முழு வடிவம் கொடுத்த பெருமை கலாநிதி ஜாயாவையே சாரும்.

1890 ஜனவரி முதலாம் திகதி கண்டி கலகெதர எனுமிடத்தில் பிறந்த இவர் மலாயப் பரம்பரையைச் சார்ந்தவர். சிறுபராயம் முதல் மீதிறன் கொண்டவராகக் காணப்பட்ட இவர் வகுப்பில் முதல் நிலை மாணவனாகத் திகழ்ந்ததுடன் பல்வேறு இரட்டைச் சித்திகள், முச்சித்திகள் பெற்று குறித்த காலத்திற்கு முன்னரே தனது கல்வி வாழ்க்கையை நிறைவு செய்து கொண்டு 1910 ஆம் ஆண்டு தனது தொழில் வாழ்வை மொரட்டுவை பிரின்ஸ் ஒப் வேல்ஸ் (Prince of Wales) கல்லூரியில் ஆரம்பித்தார். 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பப்

பகுதியில் இலங்கை முஸ்லிம்கள் நவீன கல்வியில் ஆர்வம் குன்றியவர்களாகவும் தொழில், சமூக நிலை போன்றவற்றில் பின்தங்கியும் காணப்பட்டனர். இந்நிலையிலிருந்த முஸ்லிம் சமூகத்தை மீட்டெடுக்க அரும்பாடுபட்டார்.

1919 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கொழும்பில் நடைபெற்ற இலங்கை முஸ்லிம் சங்கத்தின் கூட்டமொன்றில் "கல்வியும் தேசிய முன்னேற்றமும்" எனும் தலைப்பில் பேசும் போது, "நாங்கள் என்ன சாதித்திருக்கின்றோம்? ஏனைய சமூகத்தினர் வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் சிறப்பானவர்கள் பலரை உருவாக்கியுள்ளனர். புகழ்பெற்ற வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், அரசியல்வாதிகள் எனப் பலரை அச்சமூகங்கள் கொண்டிருக்கின்றன. முஸ்லிம்களுக்கு என்ன இருக்கின்றது? அரச சேவையில் பிரபல்யம் பெற்ற எமது முஸ்லிம்கள் எவராவது இருக்கின்றனரா? கல்வித் துறையில் சிறப்புப் பெற்ற எவராவது எம்மிடையே உள்ளனரா? புகழ்பெற்ற சட்ட சபை அல்லது மாநகர சபை அங்கத்தினர் எவரையும் நாம் பெற்றுள்ளோமா? எமக்கென்று சில கல்லூரிகளாவது உள்ளதா? முஸ்லிம் பாடசாலைகளுக்காவது எமது பிள்ளைகளைப் பெருந்தொகையாக அனுப்பியுள்ளோமா? விருப்பமின்றியே நாம் நடாத்தும் ஓரிரு ஆரம்பப் பாடசாலைகள் எங்களுக்கு மத்தியில் உண்டு என்பதே உண்மையாகும். தரமான நல்லதொரு கல்லூரி எமக்குண்டு என்று நாம் நம்பிக்கையுடன் கூற முடியுமா? திட்டவட்டமாக இல்லை என்றே கூறலாம். சிறந்த வர்த்தகர்களைக் கொண்ட ஒரு சமுதாயமும், உலகின் இன்றைய நவீன நாகரிகத்துக்கு வழிவகுத்துக் கொடுத்த மகத்தான பண்பாடொன்றின் வாரிசுகளுமான இந்நாட்டில் வாழும் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களைக் கொண்ட இச்சமுதாயம் இவ்வாறான நிலையை ஏற்றுக் கொள்வது அவமானமில்லையா? பெருந்தொகையான வர்த்தகர்களையும் செல்வச் செழிப்புள்ள நிலச் சுவாந்தர்களையும் கொண்டுள்ள இச்சமூகம் வரலாற்றின் ஆரம்ப காலங்களிலிருந்தே சிறப்பான நாகரிகத்தைக் கொண்டோரின் வாரிசுகளாக இருந்தும் இன்று இத்தகைய நிலையிலிருக்க வெட்கமில்லையா? நாம் இந்நிலையிலிருந்து விடுபடுதல் வேண்டும். அதனாற்றான் எமது முஸ்லிம் சகோதரர்கள் கொழும்பில் தமக்கென கல்லூரியொன்றை நிறுவ விசுவாசத்துடன் முற்பட்டபோதெல்லாம் உளம் நிறைந்த மகிழ்வுடன் நான் அதை வரவேற்றேன். இந்திய முஸ்லிம்களின் ஆங்கிலக் கல்வியினது தந்தையான சேர் செய்யத் அஹ்மத் கானின் மாபெரும் உதாரணம் எம்மைச் செயலில் இறங்கத் தூண்டுதல் வேண்டும். அவர் தமது இலட்சியத்திற் கவனம் செலுத்தி காரியத்தில் இறங்கினார். விரைவிலேயே அலிகார் உதயமானது. இன்றைய வினா இலங்கையின் சேர் செய்யத் அஹ்மத் கானாக மாறப்போவது யார்? அதன் மூலம் முழுச் சமுதாயத்தினதும் நிரந்தர நன்றிக்கு உரித்தாகப் போவது யார்? என்பதேயாகும்".[8]

இவரது கல்விக் கொள்கைகளை நோக்கும்போது, தாய் மொழிக் கல்விக்கு தலையாய இடம் வழங்கிய இவர் ஆங்கிலக் கல்வியை முஸ்லிம்கள் கட்டாயம் கற்க வேண்டும் எனவும் அது சமயச் சூழலில் போதிக்கப் படல் வேண்டும் எனவும் வலியுறுத்தினார். கல்வி ஒரு மாணவனது உடல், உள விருத்திக்கும் பங்காற்ற வேண்டும் என்ற வகையில் விளையாட்டுத் துறைக்கு ஊக்கம் தந்தார். அத்தோடு சமூகத்தின் பிரதான அங்கத்தவர்கள் என்ற வகையில் பெண்களும் கல்வித் துறையில் அதிக ஈடுபாடு காட்டுவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

1920 ஆம் ஆண்டு ஸாஹிராக் கல்லூரியின் அதிபர் பதவியை பெறுப்பேற்குமாறு கொழும்பு மருதானைப் பள்ளிவாசல் நிருவாக சபையினரிடமிருந்து அழைப்பு வந்தது. இவர் தன்மீது சுமத்தப்பட்ட சவால்மிக்க கௌரவத்தை துணிவுடன் ஏற்றுக் கொண்டார். ஸாஹிராவை இலங்கை முஸ்லிம்களது கல்வி மத்திய நிலையமாகவும் மாணவர்கள் நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் நாடிவரும் இடமாகவும் மாற்றினார். இலங்கை முஸ்லிம்களது கல்விக் கண்களைத் திறப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும் இவர் இக்காலப் பகுதியைப் பயன்படுத்திக் கொண்டார்.

ஜாயா ஸாஹிராக் கல்லூரியில் "கிறஸன்ட்" சஞ்சிகையினூடாக மாணவர்களது எழுத்தாற்றலை வளர்க்க முயற்சித்தார். இலங்கை முஸ்லிம்களது சமூக முன்னேற்றம் கல்வி மறுமலர்ச்சிலேயே உள்ளது என்பதை இச்சஞ்சிகையினூடாக எடுத்துக் காட்ட முற்பட்டார். அத்தோடு தனது கருத்துக்களை செயற்படுத்த ஸாஹிராவுக்கு அப்பால் பல நடவடிக்கைகளை முன்னெடுத்தார். பலபாடசாலைகளுக்குச் சென்று கற்பதற்கான வயதையும் வாய்ப்பையும் இழந்த மாணவர்களுக்கு இராப் பாடசாலை ஒன்றை 1921 ஒக்டோபர் 10ஆம் திகதி ஆரம்பித்து வைத்தார்.

கலாநிதி ஜாயாவின் கல்விப் பணி குறித்த ஒரு பிரதேசத்துடன் மாத்திரம் சுருங்கவில்லை.

ஸாஹிராவின் கிளைகள் என்ற வகையில் நாட்டின் நாலா பக்கங்களிலும் கல்வி நிலையங்களை நிறுவினார். குறிப்பாக புத்தளம், கம்பளை, கம்பளை, அளுத்தமை, குருணாகல், மாவனெல்லை, கொம்பனித் தெரு முதலிய இடங்களில் அவர் நிறுவிய ஸாஹிராவின் கிளைகள் குறிப்பிடத் தக்கனவாகும்.

இவரது கல்விப் பணி குறித்து இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது உபவேந்தரான சேர் ஐவர் ஜெனிங்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: “1927 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியிற் கற்ற 315 மொத்த மாணவர்களில் 3 பேர் மட்டுமே முஸ்லிம்களாக இருந்தனர். 1942 இல் இலங்கைப் பல்கலைக் கழகம் உருவான போது கல்வி கற்ற 904 மாணவர்களில் 37 மாணவர்கள் முஸ்லிம்களாவர். 1927-1946 வரை மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 185% அதிகரித்துள்ளது. குறிப்பாக முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை 80% அதிகரித்துள்ளது. விகிதாசாரப் படி இவ்வெண்ணிக்கை சிறியது, எனினும் கல்வித் துறையில் பெரும் எண்ணிக்கை அதிகரிப்பதை விட சிறிய எண்ணிக்கையொன்று அதிகரிப்பதே கஷ்டமாகும். ஏனெனில் ஒரு பரம்பரையே தனது தனது வாரிசுளை உற்பத்தி செய்தல் வேண்டும். எனவே கடந்த 25 வருட காலத்தில் முஸ்லிம்களது கல்வி முன்னேற்றத்துக்கு எடுக்கப்படும் முயற்சிகள் இவ்வெண்ணிக்கையை காட்டுகின்றன. இம்முயற்சியில் ஸாஹிராக் கல்லூரியினதும் அதிபர் ஜாயாவினதும் பங்கு தலையானதாகும்”[9]

கலாநிதி ஜாயா ஒரு கல்விமானாக மட்டுமன்றி ஒரு சிறந்த அரசியல் தலைவராகவும் கருதப்படுகின்றார். சட்ட சபையில் முஸ்லிகளது கல்வி உரிமைகள் பற்றி அதிகம் கவனம் செலுத்திய இவர் அவர்களது அரசியல் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட பெரும் பாடுபட்டார். 1924 இல் சட்ட சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட இவர் 1936இல் சட்ட சபையின் கல்வி நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினராகவும் பின்னர் சுதந்திர இலங்கையின் முதலாவது அமைச்சரவையில் தொழில், சமூக சேவைகள் அமைச்சராகவும் பின்னர் பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவராகவும் கடமையாற்றினார்.
1919ல் இலங்கைத் தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்ட போது அதனுடன் இணைந்து கொண்ட அவர் பின்னர் அதன் உபதலைவர்களில் ஒருவராகவும் செயற்பட்டார். 1944 நவம்பரில் பிரித்தானிய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட வெள்ளை அறிக்கை (White Paper) மற்றும் சோல்பேரி யாப்புத் தொடர்பாக இலங்கையின் சிறுபான்மை இனங்கள் திருப்திகரமான நிலைப்பாட்டினைக் கொண்டிருக்க வில்லை. குறிப்பாக அப்போதைய சூழலில் இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவது சிறுபான்மையினரைப் பாதிக்கும் என்ற கருத்துக்கள் நிலவின. இச்சமயத்தில் இலங்கையின் பெரும்பான்மைத் தலைவர்களுடன் இணைந்து இந்நாடு சுதந்திரம் பெற சிறுபான்மை முஸ்லிம்கள் தடைக்கல்லாக இருக்கப் போவதில்லை என்பதை ஜாயா தெளிவாக சட்ட சபையில் முன்வைத்தார் “இத்தருணம் கொண்டாட்டம் நடத்துவதற்கோ, பரஸ்பரக் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கான தருணமோ அல்ல; இது சிறுபான்மையினரைப் பெரும்பான்மையினர் அடக்க முற்படுவர் என கருத்துக் கூறவேண்டிய தருணமுமல்ல. நான் இச்சமயத்தல் இந்நாட்டு முஸ்லிம்கள் சார்பாக கருத்துக் கூற விரும்புகின்றேன். முஸ்லிம் பிரதிநிதிகள் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள முஸ்லிம் மக்களிடம் இத்தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர். அதற்கிணங்க இச்சபையிலுள்ள அனைத்து முஸ்லிம் உறுப்பினர்களும் தமது பூரண ஆதரவை இவ்யாப்புக்கு வழங்க முன்வந்துள்ளனர். இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவது தொடர்பான அறிக்கை இச்சபையில் அறிமுகப்படுத்தப்பட்டதும் அவர்கள் ஒரு தெளிவான நிலைப்பாட்டிற்கு வந்துள்ளனர். இந்நிலைப்பாட்டிற்கு அவர்கள் வரக் காரணம் இந்நாட்டின் தேசிய விடுதலையைப் பெற வேண்டும் என்பதாகும். இதற்காக அவர்கள் தமது நலன்களையும் விட்டுக் கொடுத்து தியாகம் செய்ய முன்வந்துள்ளனர்”.[10] எனக் குறிப்பிட்டார்.

இவரது உரை குறித்து இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா குறிப்பிடுகையில் “மதிப்பிற்குரிய சட்ட சபை உறுப்பினர் திரு ஜாயா அவர்கள் இன்று ஆற்றிய உரை இந்நாட்டு மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதில் பாரிய தாக்கம் செலுத்தும். இப்போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும். நாம் சுதந்திரத்தைப் பெற முன்னெடுக்கும் நடவடிக்கைளில் ஒரு திருப்திகரமான நகர்வாக அமையும். நியமன உறுப்பினர் ஜாயா, திரு ரசிக் மற்றும் மத்திய கொழும்பின் உறுப்பினர்களின் செயற்பாடு எத்தகையதென்றால், இந்த அரசியல் திட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவ முறையால் இந்நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களை விட அதிகம் முஸ்லிம்களே பாதிக்கப்படுவர், எனினும்

அவர்கள் இந்த யாப்பின் முக்கிய அம்சமான சுதந்திரத்திற்கு உழைக்க உறுதி பூண்டுள்ளனர்"[11] எனக் குறிப்பிட்டார். இது கலாநிதி ஜாயா இந்நாட்டின் சுதந்திரத்திற்காக தனது சமூகம் சார்ந்த நலனை தேசிய நலனுக்காக தியாகம் செய்ய முற்பட்டதை எடுத்துக் காட்டுகின்றது.

1950 ஆம் ஆண்டு பாகிஸ்தான் தூதுவராக நியமனம் பெற்று அங்கு பயணமான அவர் பாகிஸ்தான் அரசியல் யாப்பை வரைவதற்கு அப்போதைய பிரதமர் திரு. லியாகத் அலிகானுக்கு உதவினார். அத்தோடு பாகிஸ்தான் லியாகத் அலிகான் தலைமையில் இஸ்லாமிய மயப்படுத்தபட்ட போது அதனை மிகவும் வரவேற்ற இவர் முதலாம் உலக மகா யுத்தத்தின் பின் இஸ்லாமிய கிலாபத் முறை உலகிலிருந்து நீக்கப்பட்ட போது அதற்கெதிராகக் குரல் கொடுத்தார். அத்துடன் பலஸ்தீனத்தில் யூதர்களுக்கான தனியான இராச்சியம் ஒன்றை உருவாக்குவதற்கான பெல்பர் பிரகடனத்தை மேற்கொண்டமைக்காக பிரித்தானிய ஆட்சியாளர்கள் மீது கடும் கண்டனம் தெரிவித்தார்.

உண்மையில் கலாநிதி ஜாயா ஒரு முஸ்லிம் தலைவர் என்பதற்கப்பால் ஒரு தேசிய தலைவராக மதிக்கப்படுகின்றார். தனது தனிப்பட்ட அரசியல், சமூக நலன்களுக்கு அப்பால் தேசிய நலனில் அக்கறை கொண்டிருந்தமையே அதற்குப் பிரதான காரணமாகும். அத்தோடு அவர் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் முஸ்லிம்களுக்கு சமூக, அரசியல் தலைமைத்துவத்தினை வழங்கி, அறிஞர் சித்திலெப்பையின் சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுத்து, முஸ்லிம்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்ற பெருமை இவரைச் சாரும்.

**ஒப்பீடு**

மேற்குறித்த பின்னணியிலிருந்து சேர் செய்யத் அஹ்மத் கானின் பணிகளை கலாநிதி டி.பி. ஜாயாவினது பணிகளோடு ஒப்பிட்டு நோக்கின் பல ஒற்றுமைகளையும் சில அடிப்படை வேற்றுமைகளையும் கண்டு கொள்ளலாம்.

**கால சூழலும் இலக்கும்**

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் மொகலாயரது ஆட்சி வீழ்ச்சியடைந்து, முஸ்லிம்கள் பிரித்தானியரின் கெடுபிடிக்குள் சிக்கிக் கொண்டனர். குறிப்பாக 1857இல் இடம்பெற்ற சிப்பாய்க் கலகம் இந்தியாவில் முஸ்லிம்களது இருப்பையும் பாதுகாப்பையும் கேள்விக் குறியாக்கிய சூழ்நிலையே இவரது பணிகளுக்கு அத்திவாரமிட்டது. இதனால் முஸ்லிம்களது சமூகப் பாதுகாப்பும் விருத்தியுமே இக்காலத்தின் பிரதான தேவைப்பாடாக இருந்தது. எனவே நவீன கல்வியினூடாக இந்திய முஸ்லிம்களது சமூக முன்னேற்றத்துக்குப் பங்களிப்புச் செய்வதையும் ஆங்கிலேய ஆட்சியாளர்களுடன் முஸ்லிம்கள் சுமூக உறவை வளர்ப்பதனூடாக அமைதியாக வாழ்வதையும் இவரது பணிகள் கருத்திற் கொண்டிருந்தன.[12] எனினும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொழில் வாய்ப்பிலும் சமூக அந்தஸ்திலும் தேக்கமுற்றிருந்த இலங்கை முஸ்லிம் சமூகத்தை விடியலை நோக்கி நகர்த்திய பணியை கலாநிதி ஜாயா மேற்கொண்டிருந்தார். இவரது காலத்தில் காலனித்துவ வாதிகளது சவால்களை விட முஸ்லிம் சமூகத்தின் கல்வி மீதான ஆர்வமின்மையே பிரதான பிரச்சினையாக இருந்தது. உண்மையில் இவரது காலத்திற்கு முன்னர் அறிஞர் சித்திலெப்பை உற்பட பலரும் ஆற்றிய கல்விப் பணிகள் இவரது சிந்தனைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் துணையாக அமைந்தது எனலாம்.

**அணுகுமுறை**

சேர் செய்யத் அஹ்மத் கானின் சமூகப் பணிகளில் இரு பிரதான பண்பினைக் கண்டு கொள்ளலாம்.

1. நவீன ஆங்கிலக் கல்வியை மேற்கு சூழலில் இஸ்லாமிய ஒழுங்குகளுக்கு உற்பட்ட வகையில் கற்பதினூடாக சமூக முன்னேற்றம் காணல்.
2. ஆங்கிலே ஆட்சியாளருக்குச் சார்பான நிலைப்பாடு: இதனால் அவர் முஸ்லிம்கள் இந்தியத் தேசிய காங்கிரஸில் இணைவதை விரும்பவில்லை.

சேர் செய்யத் அஹ்மத் கான் மேற்கத்தேய நாகரிகச் சூழலை அடிப்படையாகக் கொண்டு தனது கல்விக் கொள்கைகளை முன்னெடுத்த சமயத்தில் "சமயச் சூழலில் நவீன கல்வி" எனும் சித்திலெப்பை முன்வைத்த கல்விக் கோட்பாட்டினை ஜாயா வலியுறுத்திமை இருவரதும் கல்விக் கொள்கையிலுள்ள பிரதான வேற்றுமை எனலாம்.

அத்தோடு இலங்கையின் உள்நாட்டுத் தலைவர்களோடு நெருக்கமான உறவினைக் கொண்டிருந்த ஜாயா இலங்கைத் தேசிய காங்கிரஸில் அங்கம் வகித்ததோடு இலங்கையின் அனைத்து சமூகங்களோடும் நல்லுறவைப் பேணிவந்தார். அத்தோடு இலங்கையின் சுதந்திரப் போராட்டத்திற்குப் பெரும் பங்காற்றிய முஸ்லிம் தலைவராகவும்

காணப்படுகின்றார். எனவே ஆங்கிலேயருக்குச் சார்பான நிலைப்பாடு என்பதை விட தேசத்தின் சுதந்திரம், சுயாதிக்கம் என்பன ஜாயாவின் அணுகுமுறையாக இருந்துள்ளது எனலாம்.

**செயற்பாடுகள்**

ஜாயாவை விட காலத்தால் முந்தியவரான சேர் செய்யத் அஹ்மத் கான் முஹம்மதன் அன்ஜலோ கல்லூரியைத் (Mohammadan Angelo College) தோற்றுவித்து முஸ்லிம் சமூகத்தினது கல்வி மறுமலர்ச்சிக்குப் பங்காற்றினார். எனினும் ஜாயா கொழும்பு ஸாஹிராவை முன்னேற்றப் பாதையில் எடுத்துச் சென்று முஸ்லிம்களது கல்விச் சிந்தனைகள் சுடர் விடும் மத்திய நிலையமாக அதனை மாற்றுவதில் வெற்றி பெற்றார். அவ்வாறே சேர் செய்யத் அஹ்மத் கான் கலை, இலக்கியத் தொண்டுகள் புரியும் நோக்கில் தஹ்தீபுல் அஹ்லாக் போன்ற சஞ்சிகைகளை வெளியிட்டது போல இவர் கிரசன்ட் எனும் சஞ்சிகையினூடாக தனது கருத்துக்களை மக்கள் மயப்படுத்த முயற்சித்தார். எனினும் அஹ்மத்கான் நூலாக்க முயற்சிகளில் ஈடுபட்டது போன்று இவர் நூலாக்க முயற்சிகள் எதிலும் ஈடுபட்டமைக்கான சான்றுகள் கிடைக்கப் பெறவில்லை. இதற்கான காரணம் அன்றைய நிலையில் ஸாஹிராவை அபிவிருத்தி செய்வதே ஜாயவுக்கு மிகவும் சிரமமாக இருந்தது. அத்துடன் பிற்பட்ட காலங்களில் அவர் அரசியலிலும் ஆர்வம் காட்டியமையினால் இதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்க வாய்ப்பில்லை என அனுமானிக்க முடியும்.

சேர் செய்யத் அஹ்மத் கான் மொழி, இலக்கியத் துறைகளுக்கு அளித்த முக்கியத்துவத்தினைப் போல விஞ்ஞான, தொழிநுட்பத் துறைகளுக்கு அளிக்க வில்லை என்ற விமர்சனம் முக்கியமானதாகும். எனினும் தான் முன்வைத்த விஞ்ஞான, தொழிற் துறை சார்ந்த கருத்துக்களைப் பிரயோக ரீதியில் முன்கொணடு செல்லப்போதிய வளங்கள் கிடைப்பெறாமை இருந்திருக்க முடியும். கலாநிதி ஜாயா நவீன விஞ்ஞான, தொழிநுட்ப, கைத்தொழில் துறைகளில் முஸ்லிம் புத்திஜீவிகள் உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வந்தாலும் அக்கருத்தியலை நடைமுறைப்படுத்தத் தேவையான வளங்களை ஸாஹிரா கொண்டிருக்கவில்ல். எனினும் ஜாயா ஸாஹிராக் கல்லூரியில் தனது அந்திம காலத்தில் தனக்குக் கிடைத்த வளங்களைக் கொண்டு கைத்தொழில் சார் கற்கைகளை அறிமுகப்படுத்தியதுடன் விஞ்ஞானப் பிரிவொன்றை ஆரம்பித்து அதனை முன்னெடுத்துச் சென்றுள்ளார். 1944 செப்டெம்பர் 25இல் ஸாஹிராக் கல்லூரியின் பொன்விழாவில் உரையாற்றும் போது இது பற்றி அவர் குறிப்பிட்டார். “ஏனைய பாடசாலைகளுடன் ஒப்பிடுகையில் எங்களால் உயர்தர சான்றிதழ் வகுப்புக்களை சிறப்பாக நடாத்த முடியாதுள்ளது, ஏனெனில் இப்பரீட்சைக்காக கற்பிக்கப்படும் பாடங்களில் அநேகமானவை விஞ்ஞானப் பிரிவைச் சேர்ந்த கற்கை நெறிகளாகும். விஞ்ஞானப் பிரிவொன்றைக் கொண்டு நடாத்துவதற்கான வளமின்மையே இதுவரை காலமும் இப்பிரிவு ஆரம்பிக்கப் படாதிருந்தமைக்கான காரணமாகும். தற்பொழுது இக்கல்லூரியில் இரசாயனவியல் (Chemestry), பௌதீகவியல் (Physics), தாவரவியல் (Botany) ,விலங்கியல் (Zoology) போன்ற பாடங்களை அறிமுகம் செய்துள்ளோம்” எனக் குறிப்பிட்டார். இது விஞ்ஞானப் பிரிவுசார் கற்கைகளின் தேவையினை வலியுறுத்தி அதனை ஸாஹிராக் கல்லூரியில் தனது அந்திம காலப்பகுதியிலேனும் அறிமுகப்படுத்த அவர் முயற்சித்துள்ளமை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

**முடிவுரை**

சர் செய்யத் அஹ்மத் கான், டி.பி ஜாயா ஆகியோரது பணிகளை கூர்ந்து கவனிக்கையில் அவர்கள் இருவரும் ஏனைய பணிகளை விட கல்விப் பணிகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கியிருப்பதை அவதானிக்க முடியும். இது அவரவர் கால சமூக முன்னேற்றத்திற்கு கல்வி மறுமலர்ச்சியே அவசியம் என அவர்கள் கருதியுள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இவர்களது பணிகளில் சில ஒத்த தன்மைகள் காணப்பட்டாலும் குறிப்பிடத்தக்க சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன. இத்தகைய வேறுபாடுகளுக்கு அன்றைய அவரவர் கால சமூகம் எதிர்நோக்கிய சவால்களும் அதனை எதிர்கொள்ள அவர்களுக்குக் கிடைத்த வளங்களுமே காரணம் எனக் குறிப்பிட முடியும்.

இவ்விரு தலைவர்களும் தனது கல்விப் பணிகள் மூலம் சாதித்தவைகள் ஒரே தன்மையுள்ள அடைவுகளாகவே உள்ளன. சேர் செய்யத் அஹ்மத்கானின் பணிகளின் விளைவாக பிறகாலத்தில் பாகிஸ்தானின் அரசியலில் செல்வாக்குச் செலுத்திய லியாகாத் அலிகான், முஹம்மத் அலி ஜின்னா போன்ற தலைவர்கள் தோற்றம் பெற்றனர். எனினும் அஹ்மத்கானின் கல்விப் பணிகளின் விளைவு மேற்கத்தேய சிந்தனையாலும் ஆங்கிலேயரின் செயற்பாடுகளாலும் கவரப்பட்ட சமய ரீதியான மிதவாதப் போக்குக் கொண்ட

பலர் உருவாகினர் என்ற விமர்சனம் அறிஞர் அபுல்ஹஸன் அலி நத்வி போன்ற அறிஞர்களால் முன்வைக்கப்பட்டாலும் அன்று இந்திய முஸ்லிம்களது பாதுகாப்பு, தொழில்வாய்ப்பு, சமூக முன்னேற்றம் என்பவற்றுக்குப் மேற்கத்தேய கல்விமுறைமையும் ஆங்கிலமும் மிகவும் அவசியப்பட்டது. இதனால் ஆங்கிலேயர்களுடனான நெருக்கமான தொடர்பினைப் பேணும்போது ஏற்பட்ட ஒரு தாக்கமாக இதனைக்கொள் முடியுமே தவிர சேர் செய்யத் அஹ்மத்கானின் பணிகளைக் குறைத்து மதிப்பிட இது எவ்வகையிலும் துணைசெய்யாது. எனினும் இத்தகைய விமர்சனம் இலங்கை முஸ்லிம் தலைவர்களைப் பொறுத்தவரை பொருந்தாது. ஜாயாவினது கல்விப் பணிகளின் விளைவு இலங்கையில் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் கல்வி விழிப்புணர்வொன்று தோற்றம் பெற்றதுடன் முஸ்லிம்கள் மத்தியில் படித்த மத்திய தரவர்க்கமொன்றின் தோற்றத்திற்கும் ஏதுவாகியது. அத்துடன் இலங்கையில் முஸ்லிம்களது அரசியல் நடவடிக்கைகளை பெரும்பான்மை இனக் கட்சிகளோடு இணைந்து முன்னெடுத்த அரசியல் தலைமுறை ஒன்று உருவாகியது எனலாம். இதுவும் கலாநிதி ஜாயாவினது அரசியல் வழிமுறை எனக் குறிப்பிடுவது தவறாக மாட்டாது. இவரது மாணவர்களான S.H. இஸ்மாயில், கலாநிதி பதியுதீன் மஹ்மூத், நெய்னா மரைக்கார், A.C.M அமீர், அபூசாலி போன்றவர்கள் இலங்கையின் முக்கிய அரசியல் தலைவர்களாகத் விளங்கினர் என்பது இங்கு கவனிக்கத் தக்கது.

சுருக்கமாக, இலங்கை முஸ்லிம்களை விட அதிக சவால்களை எதிர்நோக்கிய இந்திய முஸ்லிம்கள் மத்தியில் தனது பணிகளை மேற்கொண்ட சேர் செய்யத் அஹ்மத் கான் கலாநிதி ஜாயா கொண்டிருந்த இலக்குகளிலும் செயற்பாடுகளிலும் ஒத்த தன்மைகளைக் கொண்டிருந்தாலும் அத்தகைய இலக்குகளை அடைய கையாண்ட வித்தியாசமான அணுகுமுறையைக் கையாண்டுள்ளதை அவதானிக்க முடியும்.

### அடிக்குறிப்புகள்

[1]‘The Editorial’ 1946, *Crescent Jubilee Number*, Zahira College, Colombo, p. 2

[2]Azhar Mohamed, February 2014, ‘Sir Syed Ahmed Khan: His Life and Contribution, *Muslim Mirror*, Special Issue, P. 8

[3] M.A.M.யஸீர், 2010, மேற்கத்தேய அறிவின் அடிப்படையில் அல்குர்ஆனையும் அஸ்ஸுன்னாவையும் நோக்கிய சேர் செய்யத் அஹ்மத் கான், *அல் இன்ஷிராஹ்,* பக். 04-12

[4] M.A.M.யஸீர், 2010, மேற்கத்தேய அறிவின் அடிப்படையில் அல்குர்ஆனையும் அஸ்ஸுன்னாவையும் நோக்கிய சேர் செய்யத் அஹ்மத் கான், *அல் இன்ஷிராஹ்,* பக். 04-12

[5]Abul Hasan Ali Nadvi, 1986, *Assirau Bainal Fikrath al Islamiya wal Fikrath al Karbiya*, (Arabic) Dar al Kuwaithiya, Kuwait, p. 79

[6] மேலது, pp. 82-83

[7] மேலது, பக்.84

[8] மேலது, பக்.84

[9]S.M. Thameem, 2007, ‘Ilankai Muslimkalin Varalatril T.B. Jayah’, *Al-Inshirah,* pp.48-54.

[10]Hansard, State Council Report, 1945, Governent Printing Pres, pp. 7010

[11] மேலது, பக். 7010-7012

[12]

[13] M.S.Jalaldeen, 1996, T.B.Jayah a National Hero of Sri Lanka, Law Publishers Association, Colombo 02, p. 17

[14] Abul Hasan Ali Nadvi, 1986, p. 83

**Referances**

1. Dar, B. A. 1971, *Religious Thought of Sayyid Ahmad Khan*, Institute of Islamic Culture, Lahore.
2. Hansard, State Council Reports, 1945, Government Printing Press.
3. Jalaldeen, M.S. 1996, *T.B. Jayah; A National Hero of Sri Lanka*, Law Publishers Association, Colombo 02.
4. Jameel, S.H.M. 1994, *Kalanithi Jayavin Kalvip Panikal*, (Tamil), Islamic Books Publishing House, Kalmunai.
5. Lokubandara, W.J.M. Kaleel, M.C.M. 1962, *An Illustriuos Son of Sri Lanka*, National Intitute of Sri Lanka, Maharagama.
6. Mahroof, M.M.M. 1980, *Muslim Leaders of Sri Lanka, T.B.Jayah*, Bureau of Publications of All Ceylon YMMA Conference, Colombo.
7. Mohamed, Azhar, February 2014, 'Sir Syed Ahmed Khan: His Life and Contribution, *Muslim Mirror*, Special Issue.
8. Nadvi, Abul Hasan Ali, 1986, *Assirau Bainal Fikrath al Islamiya wal Fikrath al Karbiya*, (Arabic) Dar al Kuwaithiya, Kuwait.
9. Sir Razik Fareed Foundation 1986, *An Ethnological Survey of Muslims of Sri Lanka*, Sir Razik Fareed Foundation, Colombo.
10. Thameem, S.M., 2007, 'Ilankai Muslimkalin Varalatril T.B. Jayah', (Tamil), *Al-Inshirah*, Muslim Majlis, University of Peradeniya, Sri Lanka.
11. The Editorial, 1946, '*Crescent Jubilee Number'*, Zahira College, Colombo.
12. Troll, W.C. 1978, *Sayyid Ahmed Khan; A Reinterpretation of Muslim Theology*, Vikas Publishing House, India.